இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 23.06.2026

# ஏமாற்றம் தந்த ஆளுநர் உரை!

**ஆ**ளுநர் உரையாற்றும் நிகழ்வு சுமூகமாக இருந்ததாக பலரும் தங்களது தோளைத் தாங்களே தட்டிக் கொள்கிறார்கள். ஆளுநர் சொன்னதற்கு எல்லாம் விஜய் அரசு தலையாட்டி விட்டது. பின்னர் சுமூகமாகத்தானே இருக்கும்?

தி.மு.க. ஆட்சி காலத்தில் ஆளுநராக ஆர்.என்.ரவி இருந்தார். தான் உரையாற்றுவதற்கு முன்னால் தேசியகீதம்தான் பாட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார். **‘முடியாது, தமிழ்நாட்டின் மரபு என்பது தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட வேண்டும், ஆளுநர் உரையாற்றி முடிந்ததும் தேசியகீதம் பாடப்படும். இதனை மாற்றிக் கொள்ள முடியாது’** என்பதில் திராவிட மாடல் ஆட்சி உறுதியாக இருந்தது.

ஆளுநராக இருந்த ஆர்.என்.ரவி இதனை ஏற்கவில்லை. ஒவ்வொரு முறையும் பிரச்சினை செய்தார். 2021 ஆம் ஆண்டு ஆர்.என்.ரவி ஆளுநராக வந்தார். 2022 ஆம் ஆண்டு தனது முதல் உரையை முழுமையாக வாசித்தார். எதையும் மாற்றவில்லை. 2024 ஆம் ஆண்டு தனது உரையை வாசிக்காமல் அமர்ந்து இருந்தார். பேரவைத் தலைவர் அப்பாவு அவர்கள், ஆளுநர் உரையின் தமிழ் வடிவத்தை வாசித்தார்கள். ‘தமிழ்த்தாய் வாழ்த்துதான் பாடுகிறீர்கள், தேசிய கீதம் பாடவில்லை’ என்று சாக்குப் போக்குச் சொன்னார் ஆளுநர் ரவி. 2025 ஆம் ஆண்டிலும் இதே சாக்குப் போக்கைச் சொன்னார் ரவி.

ஆளுநர் உரைக்கு முன்னால் தேசியகீதம் பாட வேண்டும் என்பது ஆளுநர் மாளிகையின் நிபந்தனை. அதை இன்றைய விஜய் அரசு ஏற்றுக் கொண்டு விட்டது. ஆளுநர் மாளிகைக்கு தலையாட்டி விட்டது. தமிழ்த்தாய் வாழ்த்து பாடியதும் ஆளுநர் உரை என்பதை மாற்றி, தமிழ்த்தாய் வாழ்த்துக்கும் தேசிய கீதத்துக்கும் பின்னால் ஆளுநர் உரை என்ற மரபை தலையாட்டி ஏற்றுக் கொண்டு விட்டார்கள். தனது விருப்பத்தை ஏற்றுக் கொண்ட பிறகு ஆளுநர் எதற்கு முரண்டு பிடிக்கப் போகிறார்?

**விஜய் முதலமைச்சராகப் பதவியேற்ற விழாவின் தொடக்கத்தில் வந்தே மாதரம் பாடப்பட்டது. அதன் பிறகு தேசிய கீதம் பாடப்பட்டது. மூன்றாவதாக தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. தமிழை மூன்றாவது இடத்துக்கு தள்ளி வைத்து தனது பதவியேற்பு விழாவை நடத்தினார் விஜய். ஆளுநரின் அஜெண்டாவுக்கு விஜய் தலையாட்டினார். அதே போலத் தான் தனது உரைக்கு முன்னதாக தேசியகீதம் பாடப்பட வேண்டும் என்ற ஆளுநர் மாளிகையின் கோரிக்கைக்கும் அடிபணிந்து விட்டார்.**

அடுத்ததாக, ஜீன் 18 ஆம் நாளன்று ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் வாசித்த அறிக்கையில் உப்பும் இல்லை, உறைப்பும் இல்லை, சத்தும் இல்லை, சாரமும் இல்லை. ஏதுமில்லை. ஆளுநருக்கு முரண்பாடானது எதுவுமில்லை. அதனால்தான் அவர் அமைதியாக வாசித்துவிட்டுக் கிளம்பி விட்டார்.

2023 ஆம் ஆண்டு ஆளுநராக இருந்த ஆர்.என்.ரவி தனது உரையை வாசிக்காமல் போனதற்குக் காரணம் அதில் இருந்த சில சொற்கள். **பெரியார், அம்பேத்கர், கலைஞர் ஆகிய பெயர்களை விட்டுவிட்டு வாசித்தார். சுயமரியாதை, மதச்சார்பின்மை, மகளிர் முன்னேற்றம் ஆகிய சொற்களையும் விட்டுவிட்டு வாசித்தார். அவர் வாசிக்காவிட்டால் என்ன? ‘அரசு கொடுத்த உரையில் இருப்பது முழுமையாக அவைக் குறிப்பில் ஏறும்’ என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தீர்மானம் கொண்டு வந்து மாநில உரிமையை நிலைநாட்டினார்.** உடனே கோபப்பட்டு வெளியேறினார் ஆளுநர் ரவி.

ஆளுநரைக் கோபப்படுத்தும் வகையிலான வார்த்தைகள் ஏதும் அவருக்கு எழுதித் தரப்படவில்லை. ‘என்னப்பா தலைப்பு போடுவது?’ என்று மண்டையைப் போட்டு நாளிதழ்களின் ஆசிரியர்கள் உடைத்துக் கொள்ளும் வகையில் ஏதுமற்ற அறிக்கையாகத்தான் ஆளுநர் உரை அமைந்து இருந்தது.

நாளிதழ்கள் போட்ட தலைப்புகளைப் பாருங்கள்…

★ இருமொழிக் கொள்கை தொடரும் - கவர்னர் உரையில் தகவல் - இது ‘தினத்தந்தி’.

★ சமூகநீதி கணக்கெடுப்பை நடத்த முடிவு - கவர்னர் உரையில் தமிழக அரசு தகவல் - இது ‘தினமலர்’.

★ ஊழலற்ற நிர்வாகம் மூலம் பொருளாதார மறுமலர்ச்சி -ஆளுநர் உரையில் தமிழக அரசு உறுதி - இது ‘தினமணி’.

★ Arlekar reaffirms T.N.position on language policy - THE HINDU

இருமொழிக் கொள்கை தொடரும் என்பதும் சாதி வாரிக் கணக்கெடுப்பும்தான் அந்த உரையில் இருந்து அவர்களால் எடுக்க முடிந்தது ஆகும். சாதிவாரிக் கணக்கெடுப்பில் இவர்கள் சாமர்த்தியமாக தங்களை விடுவித்துக் கொண்டுள்ளார்கள் என்பதுதான் உண்மை. ( அது குறித்து பின்னர் விரிவாக எழுதுவோம்!)

**தேர்தலுக்கு முன்னதாகதான் கொடுத்த வாக்குறுதியில் ஒன்றைக்கூட நினைவூட்டி அதனை நிறைவேற்றித் தருவோம் என்ற உறுதிமொழி இந்த அறிக்கையில் இருக்கிறதா என்றால் இல்லை.**

**கடன், கடன் என்று ஓலமிடுகிறார்களே. தமிழ்நாட்டின் நிதி வளத்தை பெருக்கும் முடிவுகளை எப்படி எடுக்கப் போகிறோம் என்று சொன்னார்களா என்றால் இல்லை.**

**இந்த ஆட்சியை ஆதரிக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியே சொல்கிறது, தொழிலாளர்கள் என்ற பெயரே இந்த அறிக்கையில் இல்லை என்று.**

எதையும் குறிப்பாக இல்லாமல், பொத்தாம் பொதுவாகச் சொல்லி இருக்கிறார்கள். தீர்க்கமான முடிவுகளாக இல்லாமல் கருத்துகளாகச் சொல்லி இருக்கிறார்கள்.

திராவிட மாடல் ஆட்சியில் சொல்லப்பட்ட, நடைமுறையில் இருந்த, அறிவிக்கப்பட்ட கருத்துருக்களே வெவ்வேறு சொற்களில் இந்த உரையில் சொல்லப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கு 2031 என்று வைத்திருந்த அளவுகோலை, 2036 என தள்ளிப் போடுவதுதான் நடந்திருக்கிறது. ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்றார் திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். ‘அனைவருக்குமான அரசு’ என்று இவர்கள் சொல்கிறார்கள்.

பல்வேறு துறைகளிலும் வழவழா கொழகொழா தனமாக வார்த்தைகளைப் பயன்படுத்திய இந்த உரையில் கோவில்கள் பற்றி வரும் போது மட்டும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கொள்கையை அப்படியே பின்பற்றி இருக்கிறார்கள். **‘கோவில்கள் அதன் புனிதமான நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுவது இந்த அரசால் உறுதி செய்யப்படும்’** என்று சொல்லப்பட்டுள்ளது. விஜய் ஆட்சியை ஆதரிக்க ஆளுக்கு முன்னால் ஓடிய கட்சிகள்தான் இதனை விளக்க வேண்டும்.

**நாட்டில் மலர்ந்துள்ளது ஏமாற்றம்தான் என்பதை உறுதி செய்துள்ளது ஆளுநரின் உரை.**

●●

## மாநிலங்களின் கல்வி உரிமை பறிப்பு – ஒன்றிய அரசிற்கு எதிராக

# ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டத்தில் பெருந்திரளாக பங்கேற்பீர்!

## மாணவரணி ஆலோசனைக் கூட்டத்தில் ஆவடி சா.மு.நாசர் வேண்டுகோள்!

திருவள்ளூர், ஜுன் 23-

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. மாணவர் அணியின் அவசர ஆலோசனைக் கூட்டம் ஆவடி ரயில் நிலையம் அருகிலுள்ள மாவட்டக் கழக அலுவலகம் (வார் ரூம்) வளாகத்தில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் ம. இராஜி தலைமை வகித்தார். முன்னாள் சட்ட மன்ற உறுப்பினரும் கழக ஆதிதிராவிடர் நலக்குழு அணிச் செயலாளருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்டக் கழக நிர்வாகிகள் வி.ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், வி.குமார், காஞ்சனா சுதாகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வே.தியாகராஜன் வரவேற்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசுகையில், ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து தமிழ்நாட்டின் மொழி உரிமை, கல்வி உரிமை மற்றும் மாநில சுயாட்சிக்கு எதிராக செயல்பட்டு வருவதாக குற்றம்சாட்டினார்.

பி.எம்.ஸ்ரீ திட்டம், சிபிஎஸ்இ பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்படும் மும்மொழிக் கொள்கை, உயர்கல்விக்கான ஒரே ஒழுங்குமுறை அமைப்பை உருவாக்கும் நோக்கில் கொண்டு வரப்படும் வி.பி.ஏ.எஸ். மசோதா உள்ளிட்ட நடவடிக்கைகள் மாநிலங்களின் உரிமைகளை பறிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிட்ட அவர், இவற்றை கண்டித்து ஜுன் 23-ஆம் தேதி நடைபெறவுள்ள ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டத்தில் மாணவர் அணி நிர்வாகிகள் மற்றும் மாணவர்கள் பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

தமிழ்நாட்டு மக்களின் நலனை முன்னிறுத்தி செயல்பட்டு வரும் திராவிட மாடல் அரசை திறம்பட வழிநடத்தி வரும் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், மாணவர்களின் பிரச்சினைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வரும் கழக இளைஞரணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் கூட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டது.



தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கையை மீறி கல்வி மற்றும் நிர்வாகத் துறைகளில் இந்தியை மறைமுகமாக திணிக்க முயலும் ஒன்றிய அரசின் செயல்பாடுகளுக்கு கூட்டத்தில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. தமிழ் மொழி, தமிழர் பண்பாடு மற்றும் மாநில உரிமைகளை பாதுகாக்க மாணவர்கள் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

மேலும் மாநிலங்களின் கல்வி உரிமையைப் பறித்து சமூகநீதி மற்றும் இடஒதுக்கீட்டுக் கொள்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் புதிய கல்விக் கொள்கையை ஒன்றிய அரசு திணிக்க முயல்வது வன்மையாக கண்டிக்கப்பட்டது. ஏழை, எளிய மற்றும் கிராமப்புற மாணவர்களின் மருத்துவக் கல்விக் கனவை சிதைக்கும் நீட் தேர்வை நிரந்தரமாக ரத்து செய்து, மாநில அரசின் சேர்க்கை முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

தமிழக மக்களின் அன்றாட பிரச்சினைகள், மாணவர்களின் கல்வி, வேலைவாய்ப்பு, சமூகநீதி, பெண்கள் பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய விவகாரங்களில் தெளிவான நிலைப்பாடு எடுக்காமல் தொடர்ந்து மவுனம் காத்து வருவதாக தமிழக வெற்றிக் கழகத்தின் செயல்பாடுகளுக்கு கூட்டத்தில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அதேபோன்று, திராவிட மாடல் அரசின் மக்கள் நலத் திட்டங்களுக்கு பெயர் மாற்றம் செய்து விளம்பரம் தேடும் போக்கையும் கூட்டம் கண்டித்தது. “பிங்க் பேட்ரோல்”, “நான் முதல்வன்” உள்ளிட்ட திட்டங்களின் பெயர்களை மாற்றுவது சாதனையாகாது என்றும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டங்களை செயல்படுத்துவதே உண்மையான சாதனை என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து பேசிய ஆவடி சா.மு.நாசர், “சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு நடைபெறும் முக்கியமான மாணவர் அணி கூட்டம் இது. மாணவர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு ஒன்றிய அரசின் மக்கள் விரோத, மாணவர் விரோத கொள்கைகளுக்கு எதிராக தங்களது ஜனநாயக எதிர்ப்பை பதிவு செய்ய வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளுக்காக உழைக்கும் மாணவர்களே நாளைய தலைமுறையின் தலைவர்களாக உருவெடுப்பார்கள். உங்களைப் போன்ற மாணவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வலிமையும் எதிர்கால நம்பிக்கையும் ஆவீர்கள். எனவே ஜுன் 23-ஆம் தேதி நடைபெறவுள்ள மாபெரும் ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக்க மாணவர்கள் அனைவரும் திரள வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்கள் சன்.பிரகாஷ், ஜி. ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், டி.தேசிங்கு, என்.இ.கே.மூர்த்தி, தி.வை.இரவி, ப.ச.கமலேஷ், சே.பிரேம் ஆனந்த், டி.முரளி கிருஷ்ணன், தி.வே.முனுசாமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ் குமார், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் புருஷோத்தமன், விக்டர் மோகன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் பெ.வினோத், ஷாஜகான், விமல் ஆனந்த், பிரவீன் குமார், ஆதிகேசவன், சண்முகம், ஜி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், டி.பிரியாகுமார் உள்ளிட்டோர் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், மாணவர் அணி நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தொழிலாளர் பாதுகாப்பே மாநில வளர்ச்சியின் அடித்தளம்:

# திருவள்ளூர் விபத்து காட்டும் கூட்டுப் பொறுப்பிற்கான பாடம்!

## மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஜுன் 23 -

மனிதநேய மக்கள் கட்சி தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருவள்ளூர் தொழிற்சாலை வாயு கசிவு விபத்தில் சிக்கிய எளிய தொழிலாளர்களின் நிலை ஆழ்ந்த கவலையளிக்கிறது.

விபத்து நடந்த சில மணி நேரங்களிலேயே தேசிய பேரிடர் மீட்புப் படை (NDRF), தீயணைப்புத்துறை, மாவட்ட நிர்வாகம் மற்றும் சுகாதாரத் துறை ஆகிய பல்துறை அரசு அமைப்புகள் போர்க்கால அடிப்படையில் களமிறங்கி, நச்சு வாயுவை கட்டுப்படுத்திய விதம் மற்றும் மருத்துவ உதவிகளை முடுக்கி விட்ட வேகம் மிகவும் பாராட்டுக்குரியது.



இருப்பினும், மீட்புப் பணிகளில் அரசுத் துறைகள் காட்டும் இதே “துரித வேகம்” ஏன் விபத்துகளைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் இல்லை?

தமிழ்நாட்டை உலகளாவிய உற்பத்தி மையமாக மாற்ற நாம் இலக்கு நிர்ணயித்துள்ள சூழலில், இதுபோன்ற விபத்துகள் நமது தொழில்துறை வளர்ச்சியை (Industrial Growth) கடுமையாக முடக்கும். பாதுகாப்பற்ற சூழல் நிலவினால், சர்வதேச முதலீடுகள் குறைவதோடு மாநிலத்தின் நம்பகத்தன்மையும் கேள்விக் குறியாகும்.

பொருளாதார வளர்ச்சி என்பது தொழிலாளர்களின் உயிரைப் பலி கொடுத்துப் பெறுவது அல்ல.

பல்துறை மற்றும் சமூக அமைப்புகளை உள்ளடக்கிய 4 கட்டாயக் கொள்கை வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

சமூக அமைப்புகளை ஒருங்கிணைத்தல் பேரிடர் காலங்களில் உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய ஒரு கூட்டுப் பாதுகாப்பு வலையமைப்பை அரசு உருவாக்க வேண்டும். இவர்களுக்கு இரசாயன விபத்து கால முதலுதவி மற்றும் வெளியேற்ற முறைகளில் (Evacuation) முறையான பயிற்சி அளித்து, அரசு அமைப்புகளோடு இணைக்க வேண்டும்.

பல்துறை கூட்டுப் பணிக்குழு (MultiAgency Task Force): தொழிலக பாதுகாப்பு (DISH), மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB), தீயணைப்புத் துறை மற்றும் சமூகப் பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து, ரசாயன ஆலைகளில் 3 மாதங்களுக்கு ஒருமுறை கட்டாயக் கூட்டுப் பாதுகாப்புத் தணிக்கை நடத்தப்பட வேண்டும்.

தானியங்கி டிஜிட்டல் கண்காணிப்பு: அபாயகரமான வாயுக்களைப் பயன்படுத்தும் ஆலைகளில், மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்துடன் இணைக்கப்பட்ட ‘தானியங்கி வாயு உணர் கருவிகள்’ (Automated Sensors) 24 மணி நேரமும் செயல்படுவதைச் சட்டப்பூர்வமாக்க வேண்டும்.

கடுமையான பொறுப்புக்கூறல் (Strict Accountability): தற்போது அமைக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவின் அறிக்கை அடிப்படையில், தவறிழைத்த நிர்வாகத்தின் மீது கால தாமதமின்றி கடுமையான குற்றவியல் நடவடிக்கை பாய வேண்டும்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தகுந்த நிவாரணமும், மறுவாழ்வும் வழங்கப்பட வேண்டும். தொழில்துறை பாதுகாப்பில் சர்வதேச தரத்தை எட்ட, மக்கள் அமைப்புகளையும் உள்ளடக்கிய புதிய கொள்கை மாற்றங்களை அரசு உடனே அமல்படுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா தெரிவித்துள்ளார்.

## ‘நீட்’ மறுதேர்வு அச்சம்

# தமிழ்நாட்டில் 4 நாட்களில் 3 மாணவிகள் தற்கொலை!

தருமபுரி, ஜுன் 23-

தமிழ்நாட்டில் நீட் மறுதேர்வு எழுதவிருந்த மாணவிகள், தேர்வு பயம் மற்றும் கடுமையான மன உளைச்சல் காரணமாக அடுத்தடுத்து தற்கொலை செய்து கொண்ட நிகழ்வுகள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. கடந்த 4 நாள்களில் மட்டும் 3 மாணவிகள் தங்களது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர்.

**பயத்தால் மாணவி ரோஷ்னி தற்கொலை**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அருகேயுள்ள எண்டப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் ராமகிருஷ்ணன் (கூட்டுறவு சர்க்கரை ஆலை ஊழியர்). இவரது மகள் ரோஷ்னி (18) பிளஸ் 2 முடித்துவிட்டு, மருத்துவராகும் கனவோடு நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பயிற்சி மய்யத்தில் நீட் தேர்வுக்காக படித்து வந்தார்.

நேற்று (21.6.2026) தரும புரியில் நடைபெறவிருந்த நீட் மறுதேர்வை எழுத ரோஷ்னி சொந்த ஊருக்கு வந்திருந்தார்.

கடந்த சில நாள்களாக தேர்வு பயத்தால் மன உளைச்சலுடன் சோர்வாக காணப்பட்ட ரோஷ்னி, நேற்று முன்தினம் (20.6.2026) மாலை வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். பாலக்கோடு காவல் துறையினர் உடலைக் கைப்பற்றி உடற்கூராய்வுக்கு அனுப்பி வைத்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

**மாணவி கோபிகா தற்கொலை!**

சேலம் மாவட்டம் இடைப் பாடி அருகே கொங்கணாபுரம் வெள்ளாளபுரத்தைச் சேர்ந்தவர் சேகர். இவரது மகள் கோபிகா (19). கடந்த 2 ஆண்டுகளாக நீட் தேர்வு எழுதியும் தேர்ச்சி பெறாத நிலையில், இந்த ஆண்டு 3ஆவது முறையாக கடந்த மே 3ஆம் தேதி தேர்வு எழுதியிருந்தார். ஆனால், அத்தேர்வு ரத்தானதால், ஜுன் 21 அன்று நடைபெறவிருந்த மறுதேர்வை எழுதத் தயாராகி வந்தார்.

4-ஆவது முறையாக தேர்வு எழுத வேண்டிய அச்சத்தில் இருந்த கோபிகா, 19.6.2026 அன்று மதியம் வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

கோபிகாவின் அறையில் காவல் துறையினர் கைப்பற்றிய கடிதத்தில்,

“டியர் மம்மி, டாடி… நான் எவ்வளவோ முயன்று படிக்கிறேன், ஆனால் என்னால் முடியவில்லை. எல்லோரும் என்னை டாக்டர் என்று கூப்பிட்டீங்க, ஆனால் உங்கள் ஆசையை என்னால் நிறைவேற்ற முடியவில்லை. தம்பியை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். மம்மி, டாடி மிஸ் யூ” என்று எழுதியிருந்தார்.

**4 நாட்களில் 3 மாணவிகள் தற்கொலை சோகத்தில் தமிழ்நாடு**

நீட் தேர்வு அச்சம் காரணமாக தமிழ்நாட்டில் மாணவிகள் தற்கொலை செய்துகொள்ளும் தொடர் நிகழ்வுகள் பெற்றோர் களிடையே பெரும் சோகத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஜுன் 17: கோவையைச் சேர்ந்த மாணவி அனு கீர்த்தனா தற்கொலை.

ஜுன் 19: சேலத்தைச் சேர்ந்த மாணவி கோபிகா தற்கொலை.

ஜுன் 20: தருமபுரியைச் சேர்ந்த மாணவி ரோஷ்னி தற்கொலை.

இத்தொடர் தற்கொலை சம்பவங்கள் குறித்து அந்தந்த பகுதி காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.